# தமிழிசையும் மெய்யியலும்

**முனைவர் ஜி.பாலாஜி**

**அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, போரூர்,சென்னை-600116.**

**drgbalaji77@gmail.com.**

63

**தமிழிசையும் மெய்யியலும்**

**முன்னுரை** : இயல்,இசை நாடகம் என்ற மூன்று கூறுகளையும் கொண்டது தமிழ் மொழி. எனவே முத்தமிழ் என்று கொண்டாடப்படுகிறது. இசைக்கு மயங்காதவர்கள் எவரும் இலர். தமிழ் மொழியில் இயற்றப்பட்ட தமிழ் இசைப் பாடல்களில் அதிகமாக மெய்யியல் தொடர்புடையதாய் காணப்படுகிறது. அஃதினை இக்கட்டுரையில் காண்போம்.

**மெய்யியல்** : மெய்யான தன்மையை உணர ஆராய்ந்து ஆராய்ந்து தெளிந்து அதன் மூலம் பெறப்படும் உண்மையான தெளிவு மெய்யியல் எனக் கருதலாம்.

அருணகிரிநாதர், பட்டினத்தார் இராமலிங்க அடிகளார் போன்ற பல மகான்கள் மெய்யறிதல் தன்மைகளை அவர்கள் தெளிந்ததை அவர்கள்தம் பாடலின் வரிகள் மூலம் வெளிப்படுத்தினர்.

இசை : காகிற்கு இனிமையை தரக் கூடிய ஒலியே இசை என்பர் இசைக்கு மொழி இல்லை என்பர். எம் மொழியில் இயற்றப்பட்டாலும் இசையை அனைவரும் கேட்டு இரசிக்க முடியும். மனிதன் இயற்கையில் கேட்ட ஒலிகளை வகைப் படுத்திப ண் என பெயரிட்டான். சிலப்பதிகாரத்தில் மாதவி அரங்கேற்று காதையில் இசைப்பண்கள் பற்றிய விளக்கங்கள் விரிவாக கொடுக்கப்பட்டு உள்ளது.

சங்க காலத்தில் மனிதன் வாழ்ந்த ஐந்து விதமான நிலப்பரப்பிற்கு ஏற்ப ஐந்து பண்களை வகுத்து கொண்டான்.

| வ.எண் | நிலம் | பண் | தற்போதய இராகப் பெயர் |
| --- | --- | --- | --- |
| 1. | குறிஞ்சி (ம-ம) | குறிஞ்சிப்பண் | ஹரிகாம்போஜி |
| 2. | முல்லை (க-க) | முல்லைப் பண் | மோகனம் |
| 3. | மருதம் (வ-வ) | மருதப்பண் | |
| 4. | நெய்தல்(க-க) | செவ்வழிப்பண் | தோடி |
| 5. | பாலை(வரண்ட) | பஞ்சுரப்பண் | சங்கராபரணம் |

இவ்வாறு 24 பண்கள் பெறப்பட்டு தமிழ் இசையானது வளர்ச்சி பெற்றது.

**தமிழிசையில் மெய்யியல்**

மனிதன் தன் மனம் கடந்து மெய்யான தன்மைகளை ஆய்தல். அஃதாவது இவ்வுலக இயக்கம், அதனை இயக்கும் பொருள் அப்பொருள் எத்தன்மை வாய்ந்து என ஆராய்ந்து. அதனை தேடி சென்று மெய்யினை கண்டு அறிந்து அதனை பாடல்களால் அமைத்து இசையுடன் வெளிப்படுத்தல் ஆகும் எனலாம்.

இவை மூன்று வழிகள்

1. கர்ம,
2. யோக,
3. பக்தி என்ற வழியில் பக்தி இசையில் வழியில் செய்யப்பட்டது எனலாம். பக்தி இசை மார்க்கமாக 6முக்கிய வழிபாடு முறைகளில் மெய்யினை கண்டு தெளிவதில் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட பாடல்கள் வழி வகுத்துள்ளது எனலாம்.

ஆறு மதங்கள் ஆவன

1. சிவ
2. விஷ்ணு
3. சக்தி
4. கணே'ஷ
5. சூர்ய
6. ஸ்கந்த ஆகும்

சிவமதம் : சைவ சமயத்தில் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக கொண்டு பாடப்பட்ட பாடல்கள் கி.பி 7 முதல் 9 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய தேவாரங்கள் ஆகும்.(தே+ ஆரம்) தேவரீருக்கு சூட்டபடும் மாலை (சொல் மாலை ) இயற்றியவர்கள்.

திருநாவுக்கரசர்

திருஞான சம்மந்தர்

சுந்தரர் -- இவர்கள் பாடல் பதிகங்கள் தமிழிசையில் மெய்யியல் எனலாம். பிற்காலத்தில் 63 நாயன்மார்களின் மெய்யியலுக்கு அடிகோலாக அமைந்து எனலாம்.

**தேவாரம்**

இயற்றியவர் : திருநாவுக்கரசர்

இராகம் : 'ண்முகப்ரியா

விருத்தம்

**மனமெனும் தோணி பற்றி**
**மதியெனுங் கோலை ஊன்றிச்**
**சினமெனும் சரக்கையேற்றிச்**
**செறிகடலோடும் போது**
**மதனெனும் பாறை தாக்கி**
**மறியும் போதறிய வெண்ணா**
**துனை யுனு முணர்வை நல்கா**
**யொற்றியு ருடைய கோவே**

என்ற இப்பாடலில் மனம் என்ற படகில் நன்மை ,தீமையை உணர்த்தும் அறிவாகிய துடுப்பை பயன்படுத்தி கொண்டு கோபம் என்னும் சரக்கை ஏற்றிக் கொண்டு இவ்வுலகியல் கடலில் செல்லும் போது ஆசை என்னும் பாறை தாக்கி முடியும் நேரத்தில் மெய்யான உம்மை நினைக்கும் தெளிவினை

அருள்வாய் இறைவா என்பதன் மூலம் மண்ணுலக வாழ்வு என்பது பிறப்பு,இறப்பு கொண்டது என்ற மெய்யினை உணர்த்துவாத அறிய முடிகிறது.

வைணவ மார்கத்தில் விஷ்ணுவை போற்றும் வகையில் அமைந்த பாடல்கள் பாசுரங்கள் என்று அழைக்கப்படுகிறது.

பா- பாடல் சுரங்கள் பண்களில் அமைந்த இசைப் பாடல்கள் எனப்படுகிறது. இவை 12 ஆழ்வார்களினால் இயற்றப்பட்டவை திவ்ய பிரபந்தங்கள் எனப்படும்

பன்னிரண்டு ஆழ்வார்கள்

பொய்கை ஆழ்வார்

பூதத்தாழ்வார்

பேயாழ்வார்

பெரியாழ்வார்

நம்மாழ்வார்

திருப்பாணாழ்வார்

மதுரகவி ஆழ்வார்

திருமழிசை ஆழ்வார்

குலசேகராழ்வார்

தொண்டரடிப் பொடியாழ்வார்

திருமங்கை ஆழ்வார்

ஆண்டாள்

**திவ்யபிரந்தம்**

இயற்றியவர் : பொய்கையாழ்வார்

இராகம் : பைரவி

தாளம் : கண்டசாபு

**வையம் தகளியா வார்கடவே நெய்யாக**

**வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய**

**சூடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை**

**இடர் ஆழி நீங்குகவே** என்று.

இப்பாடலில் பொய்கையாழ்வார் இவ்வுலகை அகல் விளக்காகவும், தவழும் கடலினை எண்ணையாகவும் இவற்றின் நடுவில் தோன்றும் கதிரவனை விளக்கின் ஒளியாக கொண்டு ஜோதி சுடரான இறைவா உனக்கு ஏற்றினேன். கடல் போன்ற துன்பத்தினை நீக்குவாய் என்று பாடுகிறார். இதன் மூலம் மெய்யான இறைவனை வணங்கும் போது பொய்யான துன்பங்கள் அகன்றுவிடும் என மெய்யியலை உணர்த்தும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது எனலாம்.

**திருவெம்பாவை**

இயற்றியவர் : மாணிக்கவாசகர்

இராகம் : பௌளி

தாளம் : ஆதி

**ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்**
**சோதியை யாம்பாட கேட்டேயே வாழ்தடங்கள்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின் செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்தொலிபோல்**
**வீதி வாய் கேட்டமலுமே விம்மிவிம்மி மெய்மறந்து**
**போதார் அமளியின் மேல் நின்று புரண்டிங்கள்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே**
இதே ஏம் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

நாயகி நாய பாவத்தில் அமைந்த இப்பாடல் தன்னை போன்ற பெண்களே தொடக்கமும், முடிவும் இல்லாத சோதியான இறைவனை நான் பாடும் போது அதனை கேளாமல் இருக்கும். உன் காதுகள் என்ன செவிடோ, வீதி வழியின் இறைப் பாடலை கேட்கும் போது கண் கலங்கி மெய் (உடல்) மறந்து பக்தி செய்யாமல் படுக்கையிலே புரண்டு கொண்டு இருப்பது உனக்கு தகுமோ ஏழுவாய் மெய்யியலை தமிழ்மொழியில் இசையின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.

வைணவத்தில் -- திருப்பாவை

இயற்றியவர் : ஆண்டாள்

இராகம் : கௌளை

தாளம் : மிஸ்ரசாபு

**வையத்து வாழ்வீர்கள் நாமும் நம் பாவைக்கு**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்**
**பையத் துயின்ற பரமனடி பாடி நெய்யுண்ணோம்**
**பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
**மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்**
**செய்யதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி**
**உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்**

இறைவனை அடைய நாம் என்ன செய்ய வேண்டும் என்னவெல்லாம் செய்ய கூடாது என்று தோழிக்கு திருப்பாவையில் ஆண்டாள் இப்பாசுரம் மூலம் எடுத்துறைத்து உள்ளார். பாற்கடலுள் உறையும் இறைவனை பாடி நாட்காலையில் எழு வேண்டும். தம் புற அழகினை மேம்படுத்தும் பொருட்டு செய்யும் செயல்களை செய்யக் கூடாது மலர் அணிதல், மையிடுதல் போன்றவற்றினை தவிர்த்து. ஞானியர்களுக்கும், சான்றோருக்கும் தேவையானவற்றை செய்தும் வரியவருக்கு தேவையானவற்றை கொடுத்து உதவி செய்ய வேண்டும். இறைவனை அடைய பற்றற்ற நிலையும் ஒருவழி என்று விளக்குகிறார். மேய்யுணர்வை பெற திடமான சிந்தை வேண்டும் என்று இப்பாசுரம்

மூலம் விளக்குகிறாள் என்று உணரலாம்.

**இராமலிங்க அடிகளாரின் மெய்யியல்**

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருட்பிரகாச வள்ளலார் இறை பக்தியின் விளிம்பை தொட்டவர் எனலாம். இவருடைய தமிழ் பாடல்கள் மெய்யியல் விளக்கப்பாடலாக அமைந்தவை எனலாம்.

**திருபள்ளி எழுச்சி**

இயற்றியவர் : வள்ளலார்

இராகம் : பூபாளம்

தாளம் : ஆதி

**பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்**
**பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்கும்**
**தொழுதுநிற் கின்றனன் செய்பணி எல்லாம்**
**சொல்லுதல் வேண்டும் என வல்லசற் குருவே**
**முழுதும் ஆனான் என ஆகம வேத**
**முறைக ளெலாம் மொழி கின்றமுன் வைனே**
**எழுதுதல் அரியசீர் அருட் பெருஞ்சோதி**
**என் தந்தை யேபள்ளி எழுந் தருள் வாயே**

இருள் நீங்கி ஒளி பெருகியது போல என் உள்ள கமலம் பு+த்து அருள் ஒளியானது பரவியது. உன்னை வணங்கும் எனக்கு குருவாக உபதேசம் செய்ய வேண்டும். அனைத்திற்கும் முதலானவன் என்று ஆகமங்கள் உரைக்கின்றன. அருள் பொங்கும் சோதியே என் தந்தையே எழுந்தருள் வாயே என்று இதன் மூலம் மன இருள் நீங்க அக ஒளி தோன்றினால் மெய்யினை உணரலாம் என விளக்கிக் காட்டுகிறார்.

பாடல் இயற்றியவர் : வள்ளலார்

இராகம் : மாண்டு

தாளம் : ஆதி

**வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்**
**மயில் குயிலாச்சுசடி**
**துள்ளல் விட்டு தொடங்கினேன் மன்றாடும்**
**வள்ளலைக் கண்டேனடி**
**ஜாதி சமய சழக்கை விட்டேன் அருள்**
**ஜோதியைக் கண்டேனடி**
**பொய்யை ஒழித்துப் புறப்பட்டேன் மன்றாடும்**
**அய்யனைக் கண்டேனடி**

வள்ளல் பெருமாள் வானத்தின் கண் கண்ட காட்சியாக விவரிப்பதில் வானத்தில்

மயில்,குயிலானது போல வாழ்க்கை நிலையற்றது, ஜாதி, சமயம் இவற்றில் இறைவன் இல்லை பொய்யான இவற்றை நீங்கினாய் மெய்யான மெய்யினை காண இயலும் உணர இயலும் என்று வள்ளல் பெருமான் பொய்யினை ஒழித்து மெய்யினை உணர வேண்டும் என்று இப்பாடல் மூலம் வெளிப்படுத்தி காட்டுகிறான்.

**முடிவுரை**

ஆய்ந்து ஆராய்ந்து தெளிந்து அவர்கள் தம் பெற்ற தெளிவினை சைவ சமயம் தழுவிய ஆழ்வார்கள், 18 சித்தர்கள் பாடல்கள்,அருணகிரிநாதன் பட்டினத்தார் போன்ற பல ஞானிகள்,அறிஞர்கள் வரிசையில் 18 ஆம் நூற்றாண்டின் இராமலிங்க ஸ்வாமி ஆகியோரின் பல பாடல்கள் இயற்றி மெய்யியலை வெளிப்படுத்தி உள்ளனர்.

இசை மெய்யான பாடலுக்கு உயிராக, உயிரின் உணர்வாக தமிழிசையும் மெய்யியலுக்கு தொண்டு செய்கிறது.

துணை நூல் பட்டியல்

1. திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையம்
ஆறாம் திருமுறை – வடலூர்
நூல் பதிப்பு பாரதி டிஜிடல் பிரிண்டர்ஸ், மயிலாடுதுரை

1. .மாணிக்கவாசக சுவாமிகள்
அருளிய திருவாசகம்
வெளியிடு சைவ நூல் அறக்கட்டளை
சென்னை – 600087
பதிப்பு - ஜனவரி 2021

1. பன்னிரு ஆழ்வார்கள் கதைகள்
அரு.ராமநாதன்
பிரேம பிரசுரம் - 8 பதிப்பு - 1996

1. திருமுறை சிறப்பு மலர்
பதிப்பு - ஜனவரி 2011
கைலா'; பிரிண்டர்ஸ்